முடியாது. இப்போது பதிப்பாளர்களிடமிருந்து டெண்டர்கள் கோரப்பட்டு பரிசீலித்து அவர்கள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இந்த முறையே சிறந்தது என்று அரசாங்கம் கருதுகிறது.

திரு. முனு. ஆதி : ஏஜெண்டுகள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள் ? டெபாசிட் கட்டும் முறை உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பே கூறினேன். ரிஜிஸ்டர்டு பப்ளிஷர்ஸ் ஏராளமான பேர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத் திற்கும் டெண்டர் கோரப்படுகிறது. டெண்டர்களைப் பார்த்து யார் குறைந்த கமிஷனுக்கு விற்க முன்வருகிறார்களோ அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள்.

திரு. து. ப. அழகமுத்து : சில பள்ளிக்கூடங்களில் ஸ்டுடெண்ட்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைடீஸ் வைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந் தப் புத்தகங்களை அனுப்பி விநியோகித்தால் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தேர்ந்தெடுக்கப்பட்ட பப்ளிஷர்கள் அந்தக் கோவாப்பரேட்டிவ் சொசைடீஸ் மூலமாகவும் பள்ளிக்கூடங்களுக்கு விற்கலாம்.

Panchayat Union Schools (Text-books)

* 239 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the procedure in force for prescribing text-books for the Panchayat Union Schools;

(*b*) whether there is a proposal to revise the procedure and change the authority prescribing the text-books; and

(*c*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The Panchayat Union Education Committee prescribes the text-books for Panchayat Union Schools in all subjects other than those for which text-books have been published by Government. The Committee can select only from out of the list of books approved as suitable for class use by the Text-Book Committee.

(*b*) & (*c*) Certain District Development Councils have suggested to Government that the selection of text-books for Panchayat Union schools may be made at the Development District level. The Government are examining the suggestions.

திரு. வி. எஸ். எஸ். மணி : மதுரை மாவட்டத்தில் பள்ளிப் பாடப் புத்தகங் கள் பஞ்சாயத்து யூனியனுக்கு யூனியன் வேறுபட்டிருக்கிறது. மாவட்ட அளவிலாவது ஒரேமாதிரிப் பாடப்புத்தகங்களை நிர்ணயிக்க அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன். யூனியன் ஸ்டாண்டிங் கமிட்டி "டெக்ஸ்ட் புக்ஸ்"-ஐ நிர்ணயிக்கவேண்டு மென்று விதி இருக்கிறது. ஒருமாவட்டத்திலுள்ள டெவலப்மெண்ட் கவுன்சில் அளவில் மொத்தமாக ஸ்டாண்டிங் கமிட்டி மூலம் பாடப் புத்தகங்களை நிர்ணயிக்கலாம் என்ற யோசனை இப்போது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எம். தண்டாயுதபாணி : பஞ்சாயத்து கூட்டுத் தலைவர்கள் அந்தக் கமிட்டிக்குத் தலைவர்களாக இருக்கலாமா அல்லது அங்கத்தினர் கள் தலைவராக இருக்கலாமா ?

15th March 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : சட்டப்படி தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அது சட்டத்தைப் பொறுத்தது.

திரு. எஸ். மாதவன் : தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் கல்வித்தரம் ஒன்றுக அமையும் வகையில் மாநில சர்க்காரே புத்தகங்களை நிர்ணயித்து வழங்க முன்வருமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : மாநில முழுவதும் கல்வித் தரம் ஒரேமாதிரியாகத்தான் இருக்கிறது. அதற்காக ஒரே புத்தகத்தையே வைக்கவேண்டுமென்ற அவசியம் இல்லை. பல புத்தகங்கள் இருக்கலாம். கூடிய வரையில் நல்ல புத்தகங்களாகத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இப்போது பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில், பழைய கால நூல்களான விவேக சிந்தாமணி, அறப்பள்ளி சதகம், தண்டலயார் சதகம் போன்றவை வைக்கப்படுவதில்லை. அப்படி வைக்க சர்க்கார் அனுமதி வழங்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அனுமதி அளிப்பதில் கஷ்டம் இல்லை. கனம் அங்கத்தினரைப் போன்றவர்கள் பஞ்சாயத்து யூனியன்களுக்குச் சொல்லி பழைய ஒழுக்கத்தைக் கற்பிக்கக்கூடிய நூல்களை வைக்க வேண்டுமென்பதில் அவர்கள் அக்கறை செலுத்தவேண்டும்.

திரு. சோ. ஆறுமுகம் : பஞ்சாயத்து யூனியன்களால் அங்கீகரிக்கப்பட்ட புத்தகங்களை அடிக்கடி மாற்றி விடுகிறார்கள். அப்படி வேண்டியவர்களுக்காக மாற்றிக் கொண்டிருக்கும் நிலையைமாற்ற, குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு புத்தகங்களை மாற்றக்கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பஞ்சாயத்து யூனியன்களுக்கு அந்தப் பொறுப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள் தவருக தங்கள் இஷ்டம் போல் மாற்றுவதைத் தவிர்க்க, மாவட்ட ரீதியில் புத்தகங்களைத் தேர்ந்தெடுக்கலாமா என்று அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள்

*240 கேள்வி.—**திருமதி சி. குழந்தையம்மாள் :** கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963–64-ல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் புதிதாகத் திறக்க உத்தேசமுண்டா ?

(இ) ஆம் என்றால், எங்கெங்கே ?

(உ) பெண்களுக்காகப் பயிற்சிப் பள்ளிகள் எத்தனை திறக்கப்படும்?

THE HON. SRI M. BHAKATAVATSALAM : (*a*) No. Sir.

(*b*) & (*c*) Do not arise.

திரு. எஸ். மாதவன் : தனிப்பட்டவர்கள் நடத்தக்கூடிய ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் ஒரு சீட்டுக்கு இவ்வளவு என்று லஞ்சம் வாங்குகிறார்கள் என்ற புகார் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக அந்தமாதிரிப் புகார் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறது. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. அதைத் தவிர்க்க என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்.